**நவகத்தேகம பிரதேச சபை - 2022**

-----------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நவகத்தேகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நவகத்தேகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்க இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது முனைப்பழியுள்ள பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புதககங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 61,676 பெறுமதியான 03 விடயங்கள் இறுதி இருப்பினுள் குறைத்தும் ரூபா 32,600 பெறுமதியான ஒரு விடயம் இறுதி இருப்பினுள் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்யவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 317,500 தொகையான கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வட்டியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் விற்கப்பட்ட அல்லது இலவசமாக வழங்கிய 50,087 இடைச்செருகல் கற்களுக்குரிய கிரயமாகிய ரூபா 1,252,175 தொகை நாட்குறிப்பு 75 இன் மூலம் திரண்ட நிதியத்திற்கு வரவுவைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் இடைச்செருகல் கற்கள் இருப்பின் குறைவு திரண்ட நிதியத்தின் மூலம் செம்மையாக்கப்பட்டது. | -மேற்படி- |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நி.பி 756 மற்றும் 757 | வாகனங்கள் தொடர்பாக மீளாய்வினை நடாத்தி அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மீளாய்வு நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாண சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| நி.பி 1647(ஆ) | நிறுவனத்தின் வாகனங்களின் உபகரணங்கள் தொடர்பான முழுமையான மீளாய்வானது போக்குவரத்து உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதிகளுக்கிடையிலான பொறுப்பு தனித்தனியக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கையின் 3.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள பின்னிணைப்பில் குறிப்பிட்ட படிவத்திற்கு இணங்க ஒரு குறிப்பு சபையின் வாகனங்கள் சம்பந்தமாக பேணப்பட்டிருக்கவில்லை. | சபையின் வாகனங்கள் சம்பந்தமாக எதிர்காலத்தில் உரிய பதிவேட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 1,267,997 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 1,927,612 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை** |
| | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| வீத வரியும் வரியும் | 1,284 | 1,255 | 1,129 | 164 | 1,269 | 1,266 | 648 | 617 |
| வாடகை | 6,192 | 2,845 | 2,813 | 73 | 5,837 | 4,439 | 3,657 | 791 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 194 | 159 | 159 | - | 195 | 142 | 142 | - |
| ஏனைய வருமானம் | 876 | 686 | 666 | 31 | 4,758 | 4,765 | 2,625 | 3,484 |
| மொத்தம் | 8,546 | 4,945 | 4,767 | 268 | 12,059 | 10,612 | 7,072 | 4,892 |

**2.2.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| வீத வரி<br>வீதவரி அறவிடப்பட வேண்டிய 116 தனியார் ஆதனங்கள் மற்றும் அரசாங்க துறையின் ஒரு ஆதனம் தொடர்பான நிலுவையான வீதவரி முறையே ரூபா 157,311 மற்றும் ரூபா 6,411 இனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது. வீதவரி செலுத்ததாத அரசாங்க நிறுவனங்களுக்கு கடிதங்களை அனுப்பி தெரியப்படுத்தப்பட்டது. | நிலுவை வருமானத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது உடன்படிக்கைக்கு இணங்க மாதாந்த குத்தகையானது அந்த மாதத்தின் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்த வில்லையாயின் 10 சதவீதத்திற்கு மேற்பட்ட கட்டணத்தை செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. தாமதமடையும் காலத்திற்கு இணங்க மிகைக் கட்டண சதவீதமானது மாற்றமடையாததனால் குத்தகைதாரர்கள் வேண்டுமென்றே தாதத்தித்து குத்தகையை செலுத்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | கடை வாடகை உடன்படிக்கைக்கு இணங்க மாதாந்த வாடகையை செலுத்த தவறுபவர்கள் சம்பந்தமாக 10% மிகைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு மேலதிகமாக உடன்படிக்கையின் 7 ஆவது மற்றும் 8 ஆவது நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமடைகின்ற காலத்தின் அடிப்படையில் மிகைக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2. பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 95,000 மொத்த பெறுமதியான 02 சொத்துக்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | மோட்டார் சைக்கிளின் உரிமையாளரினை உறுதிப்படுத்தியதன் பின்னர் மற்றும் தண்ணீர் பவுசரின் பதிவினை இரத்துச் செய்ததன் பின்னர் உடைந்த பொருளாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மோட்டார் சைக்கிளினை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன் தண்ணீர் பவுசரினை பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தளபாட உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் பதிவேட்டில் ரூபா 2,027,120 பெறுமதியான 38 வகையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | பதிவேடுகளில் பதியப்படாத சொத்துக்களை துரிதமாக ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | சபையின் 27 ஆதனங்களின் சட்டரீதியான உரிமை சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளைப் பொறுப்பேற்கு நடவடிக்கை நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | ஆதனங்களை பொறுப்பேற்கான நடவடிக்கையினை துரிதமாக முடிவுறுத்துதல் வேண்டும். |
| (இ) | பிரதேச சபையினால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற கெப் வாகனம் 1992 ஆம் ஆண்டின் போது பிரதம செயலாளர் | கருத்துரைகள் தரப்படவில்லை. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| அலுவலகத்தினால் வழங்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 11 ஆந் திகதி வரை அதன் உரிமை சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**3.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்திலுள்ள 04 பதவிகள் தொடர்பாக 04 வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஆரம்ப மட்டத்தில் ஆட்சேர்த்தல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என உள்ளூராட்சி ஆணையாளரினால் எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது. | தேவையான ஊழியர் எண்ணிக்கையினை சரியாக இனங்கண்டு அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நி.பி 133(1) இற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வானது நிறுவனத்தின் செயற்பாட்ட நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் அதன் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக உதவியளிக்கும் ஒரு நடைமுறையான போதிலும் சபையின் உள்ளகக் கணக்காய்வினால் வருகை விடுமுறை, வருமானத்தை சேகரித்தல், மாதாந்த ஓட்டக் குறிப்புக்கள், வங்கி கணக்கு மீதிகள் என்பன தொடர்பாக மாத்திரமே கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நடைமுறைச் சாத்தியமான மற்றும் சரியான பாதீட்டினைத் தயாரிக்காமையின் காரணமாக மிளாய்வாண்டில் 29 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 1,952,756 நிதி ஏற்பாட்டு பணத்தில் 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான விச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | பொருளாதார மற்றும் நிதி பின்னடைவும் சபையில் நிதி போதியளவில் இல்லாமையினாலும் அத்தியவசியமான செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி பாதீடு செய்யப்பட்ட செயற்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக இனங்காணப்பட்ட 01 நடவடிக்கை முழுமையாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 06 நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்ளப்படாமை 07 சதவீதத்திலிருந்து 60 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | பொருளாதார பின்னடைவின் காரணமக நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை கைவிடுமாறு தெரியப்படுத்தியதனால் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | குறிக்கோள்களையும் இலக்குகளையும் முறையாக இனங்கண்டு அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |